# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2003 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, அங்கவீனமுற்ற ஆட்களின் உரிமைகள் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம்

---

(2003 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)


அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2003, ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 4.75 தபாற் செலவு : ரூபா 4.50

# 2003 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, அங்கவீனமுற்ற ஆட்களின் உரிமைகள் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம்

[2003 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.– ஓ 37/2002

## 1996 ஆம் ஆண்டின், 28 ஆம் இலக்க, அங்கவீனமுற்ற ஆட்களின் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–

1. இச்சட்டம், 2003 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, அங்கவீனமுற்ற ஆட்களின் உரிமைகள் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் 'முதன்மைச் சட்டவாக்கம்' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, அங்கவீனமுற்ற ஆட்களின் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :– 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:–

"(அஅ) அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் அல்லது செயலாளர் இல்லாதபோது மேலதிகச் செயலாளர்";

(2) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "ஒன்பது வேறு உறுப்பினர்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பத்து வேறு உறுப்பினர்கள்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு, "சபையின் எவரேனும் உறுப்பினருக்குக் கையளிக்கலாம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளருக்கு அல்லது செயலாளர் இல்லாதபோது மேலதிகச் செயலாளருக்குக் கையளிக்கலாம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2 - H 018091 - 1,250 (2003/05)

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு, அப் பிரிவில் (3) ஆம் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது :–

"(3) பொதுக்கட்டடங்கள், பொதுவிடங்கள், மற்றும் பொதுச் சேவைகள் என்பவற்றை அங்கவீனமுற்ற ஆட்கள் அணுகு வதனை அனுமதிப்பதற்கு வசதிகளை வழங்கும் முறையும், விதமும் விதித்துரைக்கப்பட்டவாறாதல் வேண்டும்"

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

5. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கு மிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.